**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 48/2026 |
| Deposition of Witness for | : | P.W.3 |
| Name | : | **கல்யாணி** |
| Husband Name | : | **கருப்பையா** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர். .)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 16.03.2026

**முதல் விசாரணை:**

நான் உலகினிப்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கருப்பையா எனது அண்ணன். அ.சா.2 ராக்கம்மாள் அண்ணன் மனைவி. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது. ஆஜ் எதிரியை எனக்கு தெரியாது. போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது கடந்த 28.12.2014 ம் தேதி மாலை 5.30 மணியளவில் எனது

அண்ணன் அ.சா.1 கருப்பையாவும் அவரது மனைவி அ.சா.2 ராக்கம்மாளும் வீட்டிலிருந்தபோது ஆஜர் எதிரியும் மற்றொரு எதிரியான மூக்கையா என்ற சின்னக்கருப்பன் ஆகியோரிடம் கையில் கடப்பாரை மற்றும் அருவாளால் எங்கள் வீட்டிற்கு முன்பு போடப்பட்டிருந்த கற்கால்களையும், கம்பி வேலியையும் அறுத்து சேதப்படுத்தினார்கள் என்றும் தடுக்க வந்த என் அண்ணி ராக்கம்மாளை எதிரிகள் இருவரும் அடித்துக் காயப்படுத்தினார்கள் என்றும் என் அண்ணன் வீட்டிலிருந்த வாழை மரங்களையும் அரசால் கட்டிக்கொடுக்கப்பட்ட பாத்ரூம் மற்றும் ரூ.1500/- மதிப்புள்ளவைகளை சேதப்படுத்தினார்கள் என்று போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது நாங்கள் எதிரியும் சமாதானம் ஆகி மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.16 11:17:09 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**